©
தமிழ் நாடு அரசு
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 19] சென்னை, புதன்கிழமை, மே 13, 2015
சித்திரை 30, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 49, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, 31 மார்ச் 2015.]*

பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பூத்துறை மற்றும் பெரம்பை கிராமங்களில் உள்ள ஒசூடு ஏரிப்பகுதி, வனவிலக்குகள் குறித்த பாதுகாப்பு, பரப்புரை செய்தல் மற்றும் மேம்பாட்டு நோக்கங்களுக்குப் போதிய உயிரின வாழ்க்கைச் சூழலியல், விலங்கின வளம் தாவர வளம் மற்றும் புவிப்புறவடிவியல் முக்கியத்துவம் வாய்ந்ததென தமிழ்நாடு அரசு கருதுகிறது.

அதனால், தற்போது, 1972 ஆம் ஆண்டு, வன விலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தின் (மத்திய சட்டம் 53/1972) 18 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன பகுதியை ஒசூடு ஏரி பறவைகள் சரணாலயமாக அறிவிக்கக் கருதியுள்ள அவருடைய நோக்கத்தை இதனால், அறிவிக்கிறார்.

அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மாவட்டத்தின் பெயர் | : | விழுப்புரம் | | |
| 2. வட்டத்தின் பெயர் | : | வானூர் | | |
| 3. வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் புல எண் | : | கிராமங்களின் பெயர் | *மறு நில அளவைப் புல எண்கள்* | *பரப்பு (எக்டேரில்)* |
| | | 74. பூத்துறை | 106/1 | 300.45.0 |
| | | 73. பெரம்பை | 1/1 | 31.33.5 |
| | | | **மொத்தம் ..** | **331.78.5** |

சரணாலயத்தின் பெயர் : ஒசூடு ஏரி பறவைகள் சரணாலயம்

**நாற்புற எல்லைகளின் விபரம்**

**வடக்கு:**— 74. பூத்துறை கிராம மறு நில அளவைப் புல எண்கள் 104, 27, 26 மற்றும் 15 கிழக்கிலிருந்து மேற்காக.

**கிழக்கு:**— 73. பெரம்பை கிராம மறு நில அளவைப் புல எண்கள் 52 புதுச்சேரி – வழுதாவூர் சாலை.

**தெற்கு:**— புதுச்சேரி மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி எல்லை.

**மேற்கு:**— 73, பெரம்பை கிராம மறு நில அளவைப் புல எண் 2 மற்றும் 74, பூத்துறை கிராம மறு நில அளவைப் புல எண்கள் 342, 341, 337, 330, 329, 328, 106/15, 327 மற்றும் 336 வழியாக வடக்கு நோக்கி நகர்ந்து, மேலும் மேற்கு நோக்கி மறு நில அளவைப் புல எண்கள் 108 மற்றும் 107 வழியாக கிழக்கு நோக்கித் திரும்பி, வடக்கு நோக்கி மறு நில அளவைப் புல எண்கள் 109, 112, 113, 119, 106/7, 14, 15, 12 மற்றும் 128 வழியாக நகர்ந்து, மேற்காக மறு நில அளவைப் புல எண்கள் 129 மற்றும் 131 நோக்கித் திரும்பி, பின்னர், வடக்கு நோக்கி மறு நில அளவைப் புல எண்கள் 131, 132, 133, 101, 103, 106/5, 102, 90, 106/4, 3 மற்றும் 88—க்குத் திரும்புகிறது. பின்னர், 73. பெரம்பை கிராமத்தின் மறு நில அளவைப் புல எண் 7—லிருந்து தெற்காக புல எண்கள் 6, 5 மற்றும் 4 வழியாக வடக்கு நோக்கிச் செல்கிறது.

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் மொழிபெயர்ப்பு துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*[அரசாணை (நிலை) எண் 58, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (D2)த் துறை, 26 மார்ச் 2015.]*

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், *15—10—2004 ஆம் நாளிட்ட* ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2இல் 693 முதல் 695 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)LE/603/2014 ஆம் எண் அறிவிக்கையினை ரத்துசெய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் அட்டவணையின் நெடும் பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை நெடும்பத்தி (3) இல் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தொழில் தகராறுகளில் நடுவராக இருந்து இணக்குவித்தல் மற்றும் தீர்வினை முன்னிலைப்படுத்தும் பணிக்குப் பொறுப்பான இணக்க அலுவலர்களாக, இதனால், நியமனம் செய்கிறார்.

### அட்டவணை

| *தொடர் எண்.* (1) | *அலுவலர்கள்* (2) | *பகுதி* (3) |
|---|---|---|
| 1. | தொழிலாளர் நல ஆணையர், | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும். |
| 2. | தொழிலாளர் நல இணை ஆணையர் (இணக்கம்), சென்னை | |
| 3. | தொழிலாளர் நல இணை ஆணையர் (நிருவாகம்), சென்னை | |
| 4. | தொழிலாளர் நல தனித் துணை ஆணையர், சென்னை | |
| 5. | தொழிலாளர் நல துணை ஆணையர் (ஆய்வு), சென்னை | |
| 6. | தொழிலாளர் நல துணை ஆணையர் (குறைந்தளவு ஊதியங்கள்), சென்னை | |
| 7. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (தலைமையிடம்), சென்னை | |
| 8. | தொழிலாளர் நல இணை ஆணையர், சென்னை | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 9. | தொழிலாளர் நல இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், கரூர் மற்றும் தேனி மாவட்டங்கள் |
| 10. | தொழிலாளர் நல இணை ஆணையர், மதுரை | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |

| *தொடர் எண்.* | *அலுவலர்கள்* | *பகுதி* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 11. | தொழிலாளர் நல இணை ஆணையர், கோயமுத்தூர் | சேலம், நாமக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயமுத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 12. | தொழிலாளர் நல துணை ஆணையர்– I, சென்னை. | சென்னை மாநகராட்சி |
| 13. | தொழிலாளர் நல துணை ஆணையர்– II, சென்னை. | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |
| 14. | தொழிலாளர் நல துணை ஆணையர், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 15. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 16. | தொழிலாளர் நல துணை ஆணையர், மதுரை. | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் |
| 17. | தொழிலாளர் நல துணை ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 18. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |
| 19. | தொழிலாளர் நல துணை ஆணையர், கோயமுத்தூர். | கோயமுத்தூர், மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் |
| 20. | தொழிலாளர் நல துணை ஆணையர், சேலம். | சேலம் தருமபுரி, மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 21. | தொழிலாளர் நல துணை ஆணையர், குன்னூர். | நீலகிரி, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் |
| 22. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் – I அலுவலகம், சென்னை | சென்னை மாநகராட்சி |
| 23. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் – II அலுவலகம், சென்னை | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |
| 24. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 25. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 26. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 27. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், மதுரை. | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் |
| 28. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி | திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் |
| 29. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், கோயமுத்தூர். | கோயமுத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் |
| 30. | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், சேலம். | சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 31. | தொழிலாளர் நல உதவி ஆணையர், (இணக்கம் –I) திருப்பெரும்புதூர். | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 32. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம் –II) சென்னை. | திருவள்ளூர் மாவட்டம் |

| தொடர் எண். | அலுவலர்கள் | பகுதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 33. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்), வேலூர் | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 34. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்), திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 35. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்–I), கோயமுத்தூர். | கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைகள், கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்படாத கோயமுத்தூர் தெற்கு வட்டத்தின் உள்வட்டங்கள், பெள்ளாச்சி மற்றும் வால்பாறை வட்டங்கள். |
| 36. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்–II), கோயமுத்தூர். | கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்ட உள்வட்டங்கள், நீங்கலான கோயமுத்தூர் வடக்கு வட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் சூலூர் வட்டங்கள் |
| 37. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்–III), கோயமுத்தூர். | கோயமுத்தூர் மாவட்டம் |
| 38. | தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்), நாகர்கோவில். | கன்னியாகுமரி மாவட்டம் |
| 39. | தொழிலாளர் நல அலுவலர்–I, சென்னை | சென்னை மாநகராட்சி கோட்டங்கள் 3 முதல் 49 வரையிலானவை, 99, 100 மற்றும் 102 |
| 40. | தொழிலாளர் நல அலுவலர்–II, சென்னை | சென்னை மாநகராட்சி கோட்டங்கள் 1, 2, 50 முதல் 84 வரையிலானவை, 88, 91 மற்றும் 95 வரையிலானவை, 97, 98, 101, 103 முதல் 106 வரையிலானவை, 109, 110 மற்றும் 111 |
| 41. | தொழிலாளர் நல அலுவலர்–III, சென்னை. | சென்னை மாநகராட்சி கோட்டங்கள் 85, 86, 87, 89, 90, 96, 107, 108, 112 முதல் 155 வரையிலானவை. |
| 42. | தொழிலாளர் நல அலுவலர்–I, வேலூர். | வேலூர் மாவட்டத்திலுள்ள அரக்கோணம், வாலாஜா, இராணிப்பேட்டை, ஆற்காடு, காட்பாடி மற்றும் வேலூர் வட்டம். |
| 43. | தொழிலாளர் நல அலுவலர்–II, வேலூர். | வேலூர் மாவட்டத்திலுள்ள குடியாத்தம், ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர் வட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் |
| 44. | தொழிலாளர் நல அலுவலர், கடலூர். | கடலூர் மாவட்டம் |
| 45. | தொழிலாளர் நல அலுவலர், தஞ்சாவூர். | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் |
| 46. | தொழிலாளர் நல அலுவலர், மதுரை. | மதுரை மாவட்டம். |
| 47. | தொழிலாளர் நல அலுவலர், விருதுநகர். | விருதுநகர் மாவட்டம். |
| 48. | தொழிலாளர் நல அலுவலர், இராமநாதபுரம். | இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள். |
| 49. | தொழிலாளர் நல அலுவலர், திருநெல்வேலி. | திருநெல்வேலி மாவட்டம். |
| 50. | தொழிலாளர் நல அலுவலர், தூத்துக்குடி. | தூத்துக்குடி மாவட்டம். |
| 51. | தொழிலாளர் நல அலுவலர், சேலம். | சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள். |

| *தொடர் எண்.* | *அலுவலர்கள்* | *பகுதி* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **52.** | தொழிலாளர் நல அலுவலர், கிருஷ்ணகிரி. | கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |
| **53.** | தொழிலாளர் நல அலுவலர், ஈரோடு. | ஈரோடு மாவட்டம். |
| **54.** | தொழிலாளர் நல அலுவலர், கோயமுத்தூர். | கோயமுத்தூர் மாவட்டம். |
| **55.** | தொழிலாளர் நல அலுவலர், திருப்பூர். | திருப்பூர் மாவட்டம். |
| **56.** | தொழிலாளர் நல அலுவலர், தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகம், குன்னூர். | நீலகிரி மாவட்டம். |
| **57.** | தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டு ஆணையர்கள்/இணை மேம்பாட்டு ஆணையர்கள். | மேம்பாட்டு ஆணையராக நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்தந்த சிறப்பு பொருளாதார மண்டலங்கள் |

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை

*[அரசாணை (நிலை) எண் 155, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (UD 4-2)த் துறை, 13 அக்டோபர் 2014.]*

தமிழ்நாடு **1971** ஆம் ஆண்டு நகர **–** நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **35/1972**) **10** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஜோலார்பேட்டை நகராட்சி அடங்கிய பகுதியை உள்ளூர் திட்டப் பகுதியாக குறிப்பிடுவதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக, மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரி அல்லது நிறுவனத்திடமிருந்து பெறப்படும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு உரியவாறு கருதிப்பார்க்கும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்துமூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், *புனித ஜார்ஜ் கோட்டை*, சென்னை**–600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலர்.*

*(தமிழாக்கம்)*

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.